

சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் கொடிகாத்த குமரன் அவர்களின் 122 வது பிறந்த நாளை முன்னிட்டு தாராபுரம் தேர்தல் பணிமனையில் கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா ஆகியோர் திருப்பூர் குமரனின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்டக் கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணற்றில் முன்னாள் அமைச்சர் வே.தங்க பாண்டியன் அவர்களின் துணைவியாரும் விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்கம் தென்னரசுவின் தாயாருமான ராஜா மணி அம்மாள் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு மலர் அஞ்சலி செலுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

தேர்தலுக்காக மட்டும் மக்களைச் சந்திக்கும் கட்சியல்ல!

சாமானிய மக்களுக்காகத் தொடங்கப்பட்ட இயக்கம் தி.மு.க.!

காட்பாடியில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

காட்பாடி, அக். 6- பள்ளியில் காலை உணவு, தங்க மோதிர திட்டம், மகளிர் பயணத்திட்டம் ஆகியவை தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் என தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

காட்பாடியில் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன், தி.மு.க. சாமானிய மக்களுக்காக தொடங்கப்பட்ட கட்சி என தெரிவித்தார். தேர்தலுக்காக மட்டும் மக்களை சந்திக்கும் கட்சி தி.மு.க. கிடையாது என்றும், தி.மு.க.வினர் பார்க்காத குக்கிராமங்களோ, போகாத இடமோ, சந்திக்காத மக்களோ இல்லை என்றும் அவர் தெரிவித்தார். அதேபோன்று, நாங்கள் பார்க்காத வெற்றியோ, தோல்வியோ இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். பள்ளிகளில் காலை உணவு, தங்க மோதிரம், மகளிர் பயணம் உள்ளிட்ட திட்டங்



கள் தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்டவை என்றும் அவர் கூறினார்.

இடைத் தேர்தலுக்காக தெருத் தெருவாக அலையும் விஜய்!

கொளத்தூரில் 5 நிமிடம் பேசினதுக்கே கொத்து பரோட்டா போட்டதாக சொன்ன முதலமைச்சர் விஜய், இப்போது, மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் பல மணிநேரம் பிரசாரம் செய்ததாக அவர் குறிப்பிட்டார். இடைத்தேர்தல் பிரசாரத்திற்காக, எந்த முதலமைச்சரும் இப்படி தெருத் தெருவாக, வீதி வீதியாக அலைந்தது கிடையாது என்றும் திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் கூறினார். முதலமைச்சர் விஜய் தன்னைத் தானே, அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவுடன் ஒப்பிட்டுக்கொள்வதாகவும் விமர்சித்தார்.

த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் இந்தி திணிப்பு!

தி.மு.க. ஆட்சியில், தேசிய நெடுஞ்சாலையில் இருந்த விளம்பர பலகைகளில் இந்தி தவிர்க்கப்பட்டிருந்ததாகவும், தற்போது, த.வெ.க. ஆட்சியில் அந்த மொழி மீண்டும் வருவதாகவும் கூறினார். தமிழ், ஆங்கிலம் என்று இருந்த விளம்பரப் பலகைகளில் தற்போது, இந்தியும் சேர்க்கப்பட்டிருப்பதாக குற்றம்சாட்டினார். இதற்கு தமிழக அரசு எந்த விளக்கமும் அளிக்கவில்லை என்றும் துரைமுருகன் குற்றம்சாட்டினார்.

அணையா விளக்காய்

மக்கள் மனதில் வாழ்பவர் வள்ளலார்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

சென்னை, அக். 6- திராவிட மாடல் அரசு வள்ளலார் புகழைப் போற்றியது என்றும், அணையா விளக்காய் மக்கள் மனதில் வாழ்பவர் வள்ளலார் என்றும்; அவர் புகழ் ஓங்கட்டும் என்றும் குறிப்பிட்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

வள்ளலார் பிறந்த நாளை யொட்டி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்



களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு :-

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பாடிய வள்ளலார் இராமலிங்க அடிகளார் பிறந்த நாள் இன்று. தனிப்பெருங்கருணை நாள்

சாதி மதம் சாத்திரம் என்பதை மறுத்து மானுடத்தை முன்வைத்த புரட்சியாளர் வள்ளலார்.

ஏற்றத்தாழ்வுக்கு எதிரான அறிவுத்தீயோடு பசிப்பிணி போக்குவதற்கான பெரு நெருப்பையும் ஏற்றியவர்.

வள்ளலார் பிறந்த நாளை தனிப் பெருங் கருணை நாளாக அறிவித்தது, அனைத்துலக வள்ளலார் மாநாடு, வள்ளலார் முப்பெரும் விழா, வள்ளலார் இல்லம் புனரமைப்பு, திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு வள்ளலார் பெயரைச் சூட்டியது என கழகத்தலைவர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு வள்ளலார் புகழைப் போற்றியது.

அணையா ஒளியாய் மக்கள் மனதில் வாழும் வள்ளலார் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

போட்டி போட்டு உயருகிறது பெரிய வெங்காயம் விலை!

தக்காளி கிலோ ரூ.60க்கு விற்பனை - தொடர்ந்து விலை அதிகரிப்பு!

கடும் அதிர்ச்சியில் இல்லத்தரசிகள்!

சென்னை, அக். 6- சமையலில் முக்கிய பங்கு வகித்து வரும் தக்காளி விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கிலோ ரூ.60க்கு விற்பனையாவதால் இல்லத்தரசிகள் அதிர்ச்சிடைந்துள்ளனர். தமிழகத்தை பொறுத்தவரை கடந்த 2 மாதமாக அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கடுமையாக அதிகரித்து வருகிறது. இதனால், பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். தொடர் விலை அதிகரிப்பால் ஒவ்வொரு குடும்பத்திலும் பட்ஜெட்டில் அதற்கான கூடுதல் பணம் ஒதுக்கும் நிலைக்கு இல்லத்தரசிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தக்காளி விலை அதிரடியாக உயரத் தொடங்கியுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் இருந்து தினசரி 60 வாகனங்களில் இருந்து 1,300 டன் தக்காளி வருவது வழக்கம். ஆனால், கடந்த சில நாட்களாக தக்காளி வரத்து என்பது குறைந்து வருகிறது. இதனால், தக்காளி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு நேற்று தக்காளி வருகை பாதியாக குறைந்தது. அதாவது 35 லாரிகளில் மட்டுமே தக்காளி விற்பனைக்காக வந்தது. வரத்து குறைவால் தக்காளி விலை அதிரடியாக உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ தக்காளி ரூ.40க்கு விற்பனையானது. மொத்த மார்க்கெட்டில் தான் இந்த விலை. ஆனால், வெளி மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.60க்கு விற்பனையானது. இந்த விலை உயர்வு இல்லத்தரசிகளை அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

இதுகுறித்து இல்லத்தரசிகள் கூறுகையில், "கிலோ ரூ.5க்கு விற்ற தக்காளி தற்போது பல மடங்கு ஏறி உள்ளது. தக்காளிக்கு மட்டுமே இவ்வளவு விலை என்றால் மற்ற காய்கறிகளை எப்படி வாங்க முடியும். நடுத்தர குடும்பத்தினருக்கு தக்காளி விலை உயர்வு என்பது சிரமம் தான்" என்றனர். வறட்சி காரணமாக தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக வியாபாரிகள் கூறியுள்ளனர்.

வரும் நாட்களில் தக்காளி வரத்து குறையும் பட்சத்தில் தக்காளி விலை மேலும் அதிகரிக்க தான் வாய்ப்பு உள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதேபோல பெரிய வெங்காயமும் விலை உயர்ந்து வருகிறது. மொத்த விற்பனையில் ஒரு கிலோ வெங்காயம் தரத்தை பொறுத்து கிலோ ரூ.60 வரை விற்கிறது. வெளிமார்க்கெட்டில் கிலோ ரூ.80 வரை அதிகரித்துள்ளது.

தாராபுரத்தில் த.வெ.க. அதிகார துஷ்பிரயோகம்!

சுப்பராயன் எம்.பி. குற்றச்சாட்டு!

சென்னை, அக். 6 -

தாராபுரம் ஜனநாயகத்தை துகில்உரியும் களமாகி விட்டதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பராயன் குற்றம்சாட்டியுள்ளார்.

சுப்பராயன் எம்.பி. வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



தாராபுரம் அதிகார ஆட்டம் எல்லை மீறி விட்டதாகவும், ஜனநாயகத்தை துகில்உரியும் களமாகி விட்டதாகவும், காவல்துறையின் கலோனியல் தடிகள் மிரட்டுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வெளியூர் படைகளை வேன்களில் கொண்டு வந்து த.வெ.க.வினர் இறக்கியதாகவும் சுப்பராயன் எம்.பி. விமர்சித்துள்ளார்.

அதிகாரம் என்பது ஜனநாயகத்தைக் காப்பாற்றவா? காவு கொள்ளவா? ஜனநாயகம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இடம் தேடி அலைகிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பி. சுப்பராயன் விமர்சித்துள்ளார்.

கோடிக்கணக்கில் தேர்தல் செலவு!

த.வெ.க. வேட்பாளர் கணக்கில் சேர்க்க வேண்டும்!

தேர்தல் ஆணையத்திடம் தி.மு.க. புகார்!

சென்னை, அக்.6-

த.வெ.க. முழுக்க முழுக்க தோல்வி ஜுரத்தில் இருப்பதால் பல லட்சம் செலவு செய்கிறது. அங்கு முதல்வர் வரும்போது வைக்கப்படும் கொடி, பேனர், பேரிகார்டு செலவுகளை வேட்பாளர் கணக்கில் சேர்க்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் தி.மு.க. புகார் அளித்துள்ளது. தி.மு.க. மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ நேற்று சென்னை, தலைமைச் செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கை சந்தித்து ஒரு புகார் மனு அளித்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தி.மு.க. சார்பாக மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தல் குறித்து இன்றைக்கு தேர்தல் கமிஷனிடம் புகார் ஒன்று கொடுத்திருக்கிறோம். இந்த புகாரில் தாராபுரத்திலும், மதுராந்தகத்திலும் தோல்வி பயத்தினால் த.வெ.க. அரசு எப்படி அரசாங்க ஊழியர்களையும், அந்த நிர்வாகத்தையும் துஷ்பிரயோகம் செய்து இடைத்தேர்தலில் எப்படியாவது வென்று விடலாமா என்பதை நினைக்கிறார்கள் என்பது குறித்தான புகாரை அளித்திருக்கிறோம்.

குறிப்பாக மதுராந்தகத்தில் தவெக வேட்பாளர் தன்னுடைய பிரசாரத்தின் போது அரசு ஊழியர்களை, பொதுப் பணித்துறை ஊழியர்களை வாக்காளர்களுக்கு முன்பாகவே வைத்து உடனடியாக இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று அரசாங்க ஊழியர்களை தன்னுடைய பிரசாரத்திற்காக பயன்படுத்தி இருக்கிறார். இது மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி தவறான நடவடிக்கையாகும்.

இதை மிகவும் அப்பட்டமாக வெளிப்படையாக எந்த தயக்கமும் இல்லாமல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தும் அரசாங்கத்தினுடைய ஊழியர்களை தன்னுடைய வெற்றிக்காக த.வெ.க. அரசு உபயோகிக்க படுத்துகிறது என்பதை நாங்கள் வீடியோ பதிவுகளை ஆதாரமாக கொடுத்து புகார் கொடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் தமிழக முதல்வர் 2ம் தேதி மதுராந்தகத்தில் பிரசாரம் செய்யும்போது அன்றைக்கு மட்டும் ஏறக்குறைய 20 லட்ச ரூபாய்க்கும் மேலாக செலவு செய்யப்பட்டிருக்கிறது.

கொடிகள், பேனர்கள், பேரிகார்டு என எல்லாவற்றையும் வரம்பு மீறிய செலவாக த.வெ.க. வேட்பாளர் செய்திருக்கிறார். ஒரு கட்சியினுடைய தலைவர் பிரச்சாரம் செய்யும்போது அந்த மேடைக்கு உண்டான செலவுகளும், அவருடைய பயணச் செலவுகளும் மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. மற்றபடி இந்த கொடி, பேனர் மற்றும் பேரிகார்டு ஆகியவற்றை பல லட்சக்கணக்கான செலவில் செய்திருப்பதால் அது வரையறுக்கப்பட்ட 40 லட்ச ரூபாய்க்கு மேலாக இருக்கிறது.

இந்த செலவு தொகையை மதுராந்தகம் வேட்பாளருடைய பெயரில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். தாராபுரத்தை பொறுத்தவரை தொகுதி முழுக்க தமிழக முதல்வர் மற்றும் வேட்பாளருடைய புகைப்படங்கள் அச்சிடப்பட்ட டிபன் கேரியர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது வெறும் டிபன் கேரியர் தானா என்று பார்த்தால் அப்படி அல்ல. இன்றைக்கு அந்த டிபன் கேரியரில் ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.10,000 வைத்து கொடுக்கப்படுவதாக அங்கு இருக்கக்கூடியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

எனவே தேர்தல் கமிஷன் தன்னுடைய மேற்பார்வையாளர்கள் அனைவரையும் வைத்து தாராபுரம் தொகுதியை பொறுத்தமட்டிலும் அதிக கண்காணிப்பை மேற்படுத்த வேண்டும். அமைச்சர் ஆதவ அர்ஜுனா 28ம் தேதி மதுராந்தகத்தில் பேசும்போது எதிர்க்கட்சி தலைவர் அவருடைய பற்றியும், அவருடைய தனிப்பட்ட விவகாரங்களை பற்றி பொய்யான, அவதூறான, அனைவரும் முகம் சுழிக்கும் வகையில் பேசியிருக்கிறார். அது தேர்தல் நடத்தை நிதிமுறைக்கு எதிராக இருப்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; ஏ.சி. கேரவான்ல பிரச்சாரம் செய்த முதலமைச்சர் விஜய், கடைசியிலே மாட்டுவண்டியிலே பிரச்சாரம் பண்ற நிலைக்கு வந்துட்டாரே பார்த்தியா? என்னா நடிப்பு!

போண்டி : **ஆமாய்யா! பார்த்தேன். நடிப்பு ஒரு பக்கம் இருந்தாலும் த.வெ.க. ஆட்சியின் லட்சணம் அந்த நிலைக்கு அவரைக் கொண்டு வந்துடிச்சிங்கறதுதானே உண்மை.**